**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-1 Date : 08.02.2024
Case No. : **O.S. 4/2019** Nationality : Indian
Name : லோகநாதன் Religion :
Father's/Husband's Name : சாரங்கபாணி Age : 55
Village :
Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் வழக்கின் வாதி ஆவேன். எற்கனவே பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். கும்பகோணம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அவஎண்252/2009 ல் இடைமனு எண் 23/2011 ல் 6.6.2011 ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு நீதிமன்ற சான்று நகல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.8.2016 ம் தேதி வாதி தனது வழகக்றிஞர் மூலமாக பிரதிவாதிகள் மற்றும் ராமலிங்கம், ஜெயமோகன், செல்வம், சாகுல்ஹமீது ஆகியோர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பினை 1ம் பிரதிவாதி பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **வாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பினை 2 ம் பிரதிவாதி பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **வாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பினைராமலிங்கம் என்பவர் பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **வாசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பினை ஜெயமோகன் என்பவர்

பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **வாசாஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பினை செல்வம் என்பவர் பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **வாசாஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பினை சாகுல்ஹமீது என்பவர் பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **வாசாஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 5.2.2019 ம் தேதியிட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை W.P(MD)No.552/2012 ல் பிறப்பித்துள்ள உத்தரவு நீதிமன்ற சான்றிட்ட நகல் **வாசாஆ 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.2.2013 ம் தேதியிட்ட தஞ்சாவூர் மாவட்ட குற்ற ஆவணக்கூட துணை காவல் கண்காணிப்பாளர்/ உதவி பொது தகவல் அலுவலரால் தகவல் அறியும் உரிமைசட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட பதில் கடிதம் **வாசாஆ 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.